2. மாதத்திற்கு ஒருமுறை வட்டார மேற்பார்வையாளர், வட்டார கல்வி அலுவலர் (BEO) மற்றும் ஒன்றிய உட்கூறு ஒருங்கிணைப்பாளர்களுக்கு இவ்வசதி வழங்குதல் குறித்து மீளாய்வுக் கூட்டம் நடத்தப்பட வேண்டும்.

3. வட்டார அளவில் இவ்வசதி வழங்கும் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கான, மீளாய்வுக் கூட்டம் நடத்தப்பட்டு, கூட்டம் சார்ந்த குறிப்புகளைப் பதிவு செய்து அதன் நகலை மாவட்ட அலுவலகத்திற்கு மின்னஞ்சல் மூலமாக அனுப்ப வேண்டும்.

4. வட்டார அளவில் மீளாய்வுக் கூட்டம் நடைபெறுவதற்கு முன்னர், பள்ளி அளவில் இவ்வசதி வழங்கும் மாணவர்களின் பெற்றோர்கள், மாணவர்களுக்காக நியமிக்கப்பட்ட பாதுபாவலர்கள், வாகன ஓட்டுநர்கள் மற்றும் SMC உறுப்பினர்களுக்கான கூட்டம் நடத்தி கூட்டம் சார்ந்த குறிப்புகளைப் பதிவு செய்து, அதன் நகலை வட்டார வள மையத்திற்கு அனுப்பி, வட்டார மீளாய்வுக் கூட்டத்தின் போது கலந்து ஆலோசிக்க வேண்டும்.

5. ஒவ்வொரு மாதமும் இவ்வசதி வழங்கப்படும் அனைத்து குடியிருப்புகளையும், பள்ளியையும் தவறாமல் வட்டாரம் சார்ந்த கல்வி அலுவலர், மேற்பார்வையாளர் மற்றும் ஆசிரியப் பயிற்றுநர்கள் பார்வையிட வேண்டும்.

6. வட்டாரங்களில் இருந்து ஓட்டுநர் மற்றும் பாதுகாவலர்களின் அலைபேசி எண் பெறப்பட்டு, அவரை அலைபேசியில் அழைத்து, சரியான முறையில் மாணவர்களைப் பள்ளிக்கு அழைத்துச் செல்கிறீர்களா, என்பது பற்றி அடிக்கடி ஓட்டுநர் மற்றும் பாதுகாவலருடன் பேசி உறுதிப்படுத்தப்பட வேண்டும். ஒரு ஓட்டுநர் வரமுடியாத சூழலில் மாற்று ஓட்டுநர் செயல்படுகிறாரா என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

7. வாகனத்தின் வேகம் அதிகமாக இருக்கும் பட்சத்தில் மாணவர்களின் பாதுகாப்பு கருதி, வாகனத்தின் வேகம் சீராக்கப்படுவதற்கு ஓட்டுநருக்கு அறிவுரை வழங்கப்பட வேண்டும்.

8. வட்டார மேற்பார்வையாளர் போக்குவரத்து/பாதுகாவலர் வசதி வழங்கப்படும் குடியிருப்புகளை சம எண்ணிக்கையில் பிரித்து அனைத்து ஆசிரியர் பயிற்றுநர்களுக்கு வழங்கி பார்வையிட செய்ய வேண்டும்.

9. போக்குவரத்து மற்றும் பாதுகாவலர் வசதி பெறும் மாணாக்கர்களின் பாதுகாப்பு கருதி, ஒவ்வொரு மாதமும் ஒரு பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர் போக்குவரத்து மற்றும் பாதுகாவலர் வசதி வழங்குதலை சுழற்சி முறையில் ஆண்டு முழுமைக்கும் கீழ்காணும் வழிமுறைகளை பின்பற்றி பார்வையிடலாம். மாதத்தில் 20 பள்ளி நாட்களுக்கு 20 SMC உறுப்பினர்கள் என்ற வகையில் பார்வையிடலாம்.

10. போக்குவரத்து மற்றும் பாதுகாவலர் வசதி பெறும் மாணாக்கர்களின் பாதுகாப்பு கருதி, ஒவ்வொரு மாதமும் ஒரு பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர் போக்குவரத்து மற்றும் பாதுகாவலர் வசதி வழங்குதலை சுழற்சி முறையில் ஆண்டு முழுமைக்கும் கீழ்காணும் வழிமுறைகளை பின்பற்றி பார்வையிடலாம். மாதத்தில் 20 பள்ளி நாட்களுக்கு 20 SMC உறுப்பினர்கள் என்ற வகையில் பார்வையிடலாம்.

11. காலை 8.30 மணி முதல் 9.00 மணி வரை மாணாக்கர்கள் உள்ள குடியிருப்புகளை பார்வையிட்டு வாகன ஓட்டுநர் / பாதுகாவலர், மாணாக்கர்களை குறித்த நேரத்தில் காலையில் பள்ளிக்கு அழைத்துச் செல்வதை உறுதி செய்யலாம்.

12. வாகன ஓட்டுநர் / பாதுகாவலர் மாலையில் பள்ளி நேரத்திற்கு பிறகு 4.00 மணி முதல் 4.30 மணி வரை குறித்த நேரத்தில், பள்ளியிலிருந்து மாணவர்களை குடியிருப்புகளுக்கு அழைத்து செல்கிறார்களா என்பதை வாகனங்களை / பாதுகாவலர்களை பின் தொடர்ந்து உறுதி செய்யலாம். பெற்றோர்களிடம், மாணவர்களை பாதுகாப்பாக மாலையில் வாகன ஓட்டுநர் / பாதுகாவலர் ஒப்படைப்பதை உறுதி செய்யலாம்.

13. காலையிலும் மாலையிலும், இவ்வசதி பெறும் பெற்றோர்களை சந்தித்து, இவ்வசதி வழங்குதல் சார்ந்த குறை / நிறைகளை கலந்தாலோசித்து, பள்ளி அளவில் மாதந்தோறும் நடைபெறும் பள்ளி மேலாண்மைக்கு கூட்டத்தில் பகிர்ந்து கொள்ளலாம். குறைகள் ஏதேனும் இருப்பின் உடனுக்குடன் தீர்வுகாணலாம்.

14. அனைத்து வட்டார கள ஆய்வு அலுவலர்களும் மேற்காணும் SMC உறுப்பினர்கள் பின்பற்றும் வழிமுறைகளை பின்பற்றியே பார்வை மேற்கொள்ள வேண்டும். போக்குவரத்து /